MC.43/2024

PW1 – புஷ்பலதா, க/பெ,மோகன், வயது–52

**21.07.2026**

**எதிர்மனுதாரர் ஆஜர் .**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.25 P.M.**

**விசாரணை முடிக்கப்பட்டநேரம் –01.08 P.M.**

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 21.072026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

உங்கள் திருமணம் பெரியோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். நீங்கள் எதிர்மனுதாரரை திருமணம் செய்யும்போது எதிர்மனுதாரரின் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரை நேரடியாக உங்களை பெண் பார்த்து உங்கள் பெற்றோர்களுடன் பேசிய பிறகு தான்திருமணம் நடந்தது என்றால் சரிதான். உங்களுக்கு திருமணம் நடக்கும்போது 40 வயது இருக்குமா என்றால் இருக்கும். நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள் என்றால் ஆங்கிலம் மற்றும் தமிழில் தட்டச்சு இளநிலை மற்றும் DCA பயின்றேன். திருமணத்தின்போது உங்கள் கணவர் வேலைக்கு செல்லவில்லை என்று சொன்னால் அவர் வேலைக்கு சென்றார் என்னை அவர் தாயாரின் உதவிக்காக வீட்டில் இருந்தால் போதும் என்று சொல்லிவிட்டார். உங்கள் திருமணத்திற்கு முன்பு நீங்கள் தட்டச்சராக பணியில் இருந்தீர்கள் என்றால் இல்லை. நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்றால் பொம்மிநாயக்கன்பட்டியில் வசித்து

வருகிறேன். அங்கு இருப்பது உங்களுடைய சொந்த வீடு என்று சொன்னால் சரிதான். உங்களுடைய தாயாரின் பூர்வீகம் என்ன ஊர் என்றால் மிட்டுர் பக்கத்தில் மணிமாரி குப்பம். உங்களுக்கு நிலங்கள் பொம்மிநாயக்கன்பட்டியில் உள்ளது என்று சொன்னால் சரிதான் கரம்பாக உள்ளது. எவ்வளவு விஸ்தீரணம் நிலங்கள் உள்ளது என்றால் மூன்று ஏக்கர் நிலங்கள் உள்ளது. இரண்டு வருடத்திற்கு முன்னர் ஒரு ஏக்கர் கிரயம் செய்து கொடுத்துவிட்டீர்கள் என்று சொன்னால் இருபது செண்ட் நிலம் என் திருமண செலவிற்காக கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள். உஙள் தங்கைக்க இன்னும் திருமணமாகவில்லை என்றால் சரிதான். உங்கள் தங்கைக்கு என்ன வயதாகும் என்றால் ஐம்பது வயது இருக்கும். உங்கள் தாய் மாமன் உங்களுடன் தான் இருக்கிறாரா என்றால் இல்லை. உங்களுக்கு திருமணமாகி இரண்டு மாதங்கள் மட்டும் தான் எதிர்மனுதாரருடன் வாழ்ந்தீர்களா என்றால் இரண்டு வருடங்கள் என் கணவருடன் வாழ்ந்தேன் அப்போது அவருக்கு எந்த வருமானமும் இல்லை. உங்களுடைய கர்ப்பை நீர்கட்டி மருத்துவ சிகிச்சைக்கு உங்கள் தாயார் வீட்டிற்கு சென்று சரிசெய்துவிட்டு வருவதாக சொல்லி எதிர்மனுதாரரை விட்டு சென்றுவிட்டீர்கள் என்று சொன்னால் சரிதான். மருத்துவ சிகிச்சை முடித்து மீண்டும் மூன்று மாதம் கழித்து எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்துவிட்டேன். உங்கள் முதல் விசாரணை சங்கதிகள் நீங்கள் சொல்லியது தானா என்றால் சரிதான். உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் நகைகள் குறித்து மூன்றாம் பத்தியில் சொல்லியதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்களுடைய கல்வி தகுதிக்கான ஆதாரம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர் என்ன வேலை செய்கிறார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் பட்டாசு கடை வைத்துள்ளார். எங்கு கடை வைத்துள்ளார் என்றால் நாட்றம்பள்ளி, புத்துக்கோவிலில் பட்டாசு கடை வைத்துள்ளார். உங்கள் திருமணத்தின்போது எதிர்மனுதாரர் பட்டாசு கடை வைத்திருந்தார் என்று சொன்னால்

இல்லை திருமணத்திற்கு பின்பு தான் கடை வைத்தார். தற்போது எதிர்மனுதாரர் பட்டாசு கடை எடுத்துவிட்டார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. கடந்த 05.07.2021 அன்று எதிர்மனுதாரர் உங்களை அடித்து துரத்திவிட்டார் என்று சொல்வதற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் தொடர்பாக மருத்துவரிடம் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. கடந்த 2021–ம் ஆண்டு முதல் உங்கள் தாயார் வீட்டில் தான் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்க முயற்சி ஏதேனும் எடுத்தீர்களா என்றால் நான் தயாராக தான் இருந்தேன். எதிர்மனுதாரர் தான் தன்னடைய பெற்றோரையும், உடன்பிறந்தவர்களையும் கலந்தாலோசிக்கவேண்டும் என்று சொல்லி சேர்ந்து வாழ மறுத்துவிட்டார். கடந்த 16.03.2020 அன்று உங்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக அம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகார் மனு எண்.83/2020 அடிப்படையில் உங்களை விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். மேற்படி புகார் மனு ரசீது **<u>எ.ம.சா.ஆ.1.</u>** கடந்த 11.07.2022 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் உங்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக புகார் கொடுத்திருந்தார் எனவும் அதுதான் உங்களிடம் காட்டப்படுவது என்று சொன்னால் சரிதான். மேற்படி அம்மனு ஏற்பு ரசீது **<u>எ.ம.சா.ஆ.2.</u>** உங்களுடைய வீடு வேடப்பட்டு கிராம நிர்வாக எல்லைக்குள் வருகிறது என்றால் சரிதான். உங்களுடைய சொத்து விவரம் குறித்து எதிர்மனுதாரர் கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்ததற்கு நீங்கள் ஆட்சேபணை தெரிவித்த காரணத்தினால் எதிர்மனுதாரருக்கு அதன் விவரம் கொடுக்கப்படவில்லை எனவும் அற்கான ஆவணம் தான் உங்களிடம் காட்டப்படுவது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் **<u>எ.ம.சா.ஆ.3.</u>** நீங்கள் சேர்ந்து வாழ்வதற்காக எதிர்மனுதாரர் வீட்டிற்க செல்லவில்லை என்று சொன்னால் என்னை அடித்து துரத்திய காரணத்தினால் நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு செல்லவில்லை. உங்களுடைய குடும்பத்தை மிட்டாதாரர்

குடும்பம் என்று சொல்லுவார்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2021. உங்கள் தகப்பனார் என்ன வேலைக்கு சென்றார் என்றால் விவசாயம் செய்தார். உங்கள் தம்பி என்ன வேலை செய்தார் என்றால் என் தம்பி பொறியியல் முதலாம் ஆண்டு படித்து உடல் ஆரோக்கிய குறைபாட்டின் காரணமாக இறந்துவிட்டார். உங்கள் பெற்றோர்கள் எதிர்மனுதாரரை அழைத்து சேர்ந்து வாழ்வது குறித்து பேசினார்களா என்றால் எதிர்மனுதாரரே வந்தார் ஆனால் அவர் நான் சேர்ந்து வாழ்வதற்கு ஒத்துழைக்கவில்லை. நீங்கள் இவ்வழக்கை 2024–ம் ஆண்டு தாக்கல் செய்வதற்கான காரணம் என்னவென்றால் எதிர்மனுதாரர் வாழ்வதற்காக மனுவிற்கு எதிர்வழக்காக நான் இவ்வழக்கு தாக்கல் செய்தேன். உங்களுக்கு பொருளாதார உதவி தேவையில்லாத காரணத்தினால் நீங்கள் 2024–ம் ஆண்டு வரை ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்கள் திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு என்ன வயது இருக்கும் என்றால் நாற்பது, நாற்பத்து ஒன்று இருக்கும். உங்கள் திருமணத்தின்போது எதிர்மனதாரர் எந்த வேலையும் செய்யவில்லை என்றும் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று தான் எதிர்மனுதாரரை உங்கள் பெற்றோர்கள் திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தொழில் வருமானம் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் மிட்டாதாரர் குடும்ப உறுப்பினர் என்ற காரணத்தினால் வேலைக்கு யாரும் செல்லாமல் நிலங்களை விற்று ஜீவித்து வருவது பழக்கம் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எதிர்மனுதாரரை பழிவாங்குவதற்காக தாக்கல் செய்த வழக்கு என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போது உங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்று சொன்னால் எதிர்மனுதாரரின் தாயரின் மற்றும் சகோதரியின் துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடும் என்ற காணரத்தினால் நான் அவருடன் கூட்டுக்குடும்பமாக சேர்ந்து வாழ தயாராக இல்லை தனிக்குடும்பமாக வாழ தயாரா உள்ளேன். எதிர்மனுதாரரின் சகோதரிகள் இருவரும் திருமணமாக தனியாக தான்

வாழ்ந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான் தொலைபேசியின் மூலம் எதிர்மனுதாரரின் தாயாருக்கு சொல்லிக்கொடுத்து என்னிடம் பிரச்சினை செய்வார்கள்.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K
ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.07.23 17:01:24 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.